This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# இதன் பெயரும் கொலை

## 1

**தொ**ப்பி, நீதிபதியின் மேசை முன் வைக்கப்பட்டிருந்தது. காபி கலரில் சற்றே பழசாக இருந்தது. டைப் அடித்துக் கொண்டிருந்த கோர்ட் க்ளார்க் அதை நாய் கொண்டு வந்த வஸ்துவைப் போலப் பார்த்துக் கொண்டிருக்க, கணேஷ் அதை எடுத்தான்; ஆராய்ந்தான்.

கணேஷ் மெள்ள வந்து சாட்சி சோமசேகரைக் கண் கொட்டாமல் பார்த்தான். வஸந்த் ஒரு இன்ஜங்ஷன் வாங்க மற்றொரு கோர்ட்டுக்குப் போயிருந்தான். கணேஷிடம் கேஸ் காகிதங்கள் ஏதும் இல்லை. சமயோஜிதம் தேவைப்பட்டது. அட்ஜர்ன்மெண்ட் வாங்க முடியாது. பாண்டே கோவித்துக் கொள்வார்.

வோல்டேஜ் பஞ்சம். மின்விசிறி அசதியாகச் சுற்றிக் கொண்டிருந்தது. வெளியே இன்கம்டாக்ஸ் கவலையின்றி சைனாபஜார் இயங்கிக் கொண்டிருந்தது. ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் உட்கார்ந்தவாறே உறங்கிக் கொண்டிருந்த கசகசப்பான மார்ச் தின மதியம். மில்லெனியத்தின் இறுதியாண்டு. குற்றம் சாட்டப்பட்ட நரசிம்மன் ஒரே திசையில் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் எள்ளளவும் நம்பிக்கை இல்லை. இவனைக் காப்பாற்ற வேண்டும். "தூக்குல போடாம ஆயுள் தண்டனைனாலும் சரிங்கய்யா" என்று கதறியிருக்கிறான்.

நரசிம்மனின் தொப்பி இறந்தவன் சடலத்தின் அருகில் கிடந்ததாக சோமசேகர் சத்தியம் அடித்து சாட்சி சொல்லியிருந்தான். அவனைப் பார்த்தால் சல்லியாக பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் விற்றுவிட்டு பத்து பர்சண்ட் கமிஷனும் கொடுப்பான் போலத் தோற்றமளித்தான்.

"இந்த தொப்பி இறந்துபோன கதிரேசனுடையதுங்கறிங்களா மிஸ்டர் சோமசேகர்?"

"ஆமாங்க"

"இதே தொப்பி? இதே மூக்குப் பொடி கலர்?"

"ஆமாங்க எத்தன தரம் இதைக் கேப்பிங்க?"

கணேஷ் கோபத்துடன் "எத்தனை தரம் கேட்டாலும் பதில் சொல்லியாகணுங்க. உங்க சாட்சியத்தில அந்தாளு உசுரு ஊசலாடுதுங்க".

"கணேஷ் 'டோன்ட் டெர்ரரைஸ் தி விட்னஸ்" என்றார் நீதியரசர் மனோகர் பாண்டே.

"ஹி இஸ் எ ப்ரொபெஷன்ல் லையர் யுவர் ஆனர்"

"வெல். ப்ரூவ் தட்."

"எப்பவும் அவர் தொப்பிதான் போடுவாரா சோமசேகர்?"